இப்படி பலபடி விஸ்ரம்பத்தை பெரியோர்கள் காட்டினார்களே. **अहम्भवामि** என்பது ஒரேபதம்.

* * *

तव भरोऽहम् अकारिषि धार्मिकैः,
शरणम् इत्यपि वाचम् उदैरिरम् ।
इति ससाक्षिकयन् इदमद्य मां
कुरु भरं तव रङ्गधुरन्धर! ॥ १०२ ॥

தவ பரோऽஹம் அகாரிஷி தார்மிகை:
ஶரணம் இத்யபி வாசம் உதைரிரம் ।
இதி ஸஸாக்ஷிகயன் இதம் அத்ய மாம்
குரு பரம் தவ ரங்கதுரந்தர ॥ 102 ॥

பதவுரை:

ரங்கதுரந்தர!	-	எல்லோரையும் பாதுகாப்பதாகிய பாரத்தைத் தாங்கிவரும் ஸ்ரீரங்கநாதனே!
அஹம்	-	அடியேன்
தார்மிகை:	-	தர்மத்தை அநுஷ்டிப்பதிலேயே நோக்குள்ள ஸ்ரீஎம்பார்-எம்பெருமானார் என்ற மஹனீயர்களால்
தவ	-	தேவரீருடைய
பர:	-	பாரமாக
அகாரிஷி	-	செய்யப்பட்டேன்.

ஶரணம்	-	தேவரீரே அடியேனுக்குப் பாதுகாவலர்
இதி	-	என்கிற
வாசம் அபி	-	சொல்லையும்
உதைரிரம்	-	சொன்னேன்.
இதி	-	என்கிற
இதம்	-	இதை
ஸஸாக்ஷிகயன்	-	ப்ரமாணமாகச் செய்துக்கொண்டு
அத்ய	-	இப்போது
மாம்	-	அடியேனை
தவ பரம்	-	தேவரீருடைய பாரமாக
குரு	-	செய்துக் கொண்டருள வேண்டும்.

ஶரணாகதியை **उक्तिनिष्ठा-आचार्यनिष्ठा-भागवतनिष्ठा** என்றவாறு பலபடி **ஸ்ரீபாஞ்சராத்ராகமங்களில்** காட்டினார்கள். இந்த ஶ்லோகத்தில் ஆசார்ய நிஷ்டையை முதல் பாதத்தாலும் - உக்திநிஷ்டையை இரண்டாவது பாதத்தாலும் அருளிச்செய்கிறார்.

ஆசார்யநிஷ்ட்டையாவது: தனது ஆசார்யர் தாமுய்ய எம் பெருமானிடத்தில் ஶரணாகதி செய்யும்போது - **पुत्रः प्रेष्यः तथा शिष्य इत्येवं च निवेदयेत्** (சாண்டில்யர்-3-75) என்று மஹர்ஷி காட்டிய படி. தமது பிள்ளை-பெண்-வேலையாள்-சீடன் முதலானவர்களும் இதில் அடங்கினவர்கள்- என்றபடி அவர்களுக்கும் செய்வது. உக்திநிஷ்ட்டாதிகளைவிட இப்படி ஆசார்ய நிஷ்டையே சிறந்தது என்பதைப் போன்று ''ஒரு மலையில் நின்று ஒரு மலையிலே தாவும் ஸிம்ஹஶரீரத்தில் ஐந்துக்களைப் போல் - **ஸ்ரீபாஷ்யகாரர்**

ஸம்ஸார லங்கனம் பண்ண- அவரோடு உண்டான குடல் துவக் காலே நாமும் உத்தீர்ணர் ஆவுதோம்'' என்று **ஸ்ரீமுதலியாண்டான்** அருளிய வாக்யத்தை எடுத்துக்காட்டி **அதிகாரி விபாகாதிகாரத்தில்** அருளிச் செய்ததை இங்கு அநுஸந்திப்பது. கண் தெரியாதவரை கண் உள்ளவர் அழைத்துச் செல்கிறார். கால் செயல்படாதவரை படகில் உட்காரவைத்து ஓடக்காரர் அக்கரைக்கு அழைத்துச் செல்கிறார். **கண்**=ஜ்ஞானமும் இல்லை, **கால்**=நடக்க காலு மில்லை - (அநுஷ்டானமுமில்லை). ஆயினும்-சிறு குழந்தையை அரசாங்க உத்யோகஸ்தன் பாதுகாக்கிறான். அக்குழந்தைக்கு அரசாங்கத்தில் சேவகம் செய்தால்தான் பணம் கிடைக்கும் என்ற அறிவுமில்லை, செய்ய சக்தியுமில்லை. அதைப் போல் தேவரீரை அடைவிக்க அடியேனுக்கு **ஆசார்யர்** உள்ளார்- என்ற கருத்தில் - ''**अन्धोऽनन्धग्रहणवशगो याति रङ्गेश! यद्वत् पङ्गुर्नौकाकुहरनिहितो नीयते नाविकेन। भुङ्क्ते भोगान् अविदितनृपः सेवकस्यार्भकादिः त्वत्सम्प्राप्तौ प्रभवति तथा देशिको मे दयालुः**'' ।। *என்று* ***நியாஸதிலகத்தில்*** *(சு.21)* இதை அருளியுள்ளார். ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் மற்றவைகளைக் காண்க.

உக்தி நிஷ்டையாவது:- ''**आचार्योपदिष्टवाक्य**த்தாலே தாதிமார் சொன்ன பாசுரத்தைச் சொல்லி **सार्वभौम**னை **शरण** புகும் **मुध**ரான **सामन्तकुमार**ர்களைப் போலே- என்னுடைய ரக்ஷை உனக்கே **भर**மாக ஏறிட்டுக் கொள்ள வேணும்- என்கை.'' என்று **அதிகார விபாகாதிகாரத்தில்** அருளினார்.

இப்படியிருக்க-அடியேன்-**எம்பார்-ஆழ்வான்** இருவர்க ளாலும் தேவரீரால் ரக்ஷிக்கப்படவேண்டியவனாக- எம்பெரு மானிடம் ஸமர்ப்பிக்கப்பட்டவன். அடியேனும் ஶரணம் என்று தேவரீரிடம் வேண்டிவருகிறேன். ஆசார்யர்கள் ஸமர்ப்பித்ததே போதும். ஆயினும் நானும் அதை உணர்ந்து தினமும் **द्वयमर्थानु-**

सन्धानेन सह सदा एवं वक्ता என்று **ஸ்ரீபாஷ்யகாரர்,** அருளியபடி கூறி வருகிறேன் - நினைவு கூர்கிறேன். ஆகவே அரங்கநகரப்பனே! அடியேனைப் பாதுகாக்க வேண்டிய பாரத்தை தேவரீர் ஏற்க வேண்டும் என்றபடி. ''இதில் மிகுதி காட்டுகிற **अपि शब्द**த்தாலே ஒரொன்றே அமையும் என்று **सूचितम्** ஆயிற்று'' என்று ஆசார்யர் இதை விளக்கினார்.

ஸ்ரீபாஷ்யகாரர் ஒரு பங்குனி உத்தர நன்னாளில் ஸ்ரீரங்க திவ்ய தம்பதிகளிடம் சரணாகதி அநுஷ்டித்தது- அப்போது அவரது சிஷ்யர்களாயிருந்த மஹனீயர்களுக்கே. பின்பு பிறந்த நமக்கெல்லாம் அதனால் சரணாகதி ஆனதாக ஆகாது. ''ஸரணாகதி ஒன்றே உபாயம். இது அநுஷ்டிப்பவருக்கு கட்டாயம் மோக்ஷம் உண்டு'' என்பதே, **अस्तु ते, तयैव सर्वं संपत्स्यते** என்ற ஸ்ரீஸூக்திக்கு பொருள். மற்றவற்றை பெரியோரிடம் கேட்டுத் தெளிவது. **उक्त्या विभीषण धनञ्जनलक्ष्यया ते -** என்ற சுலோகத்துக்கும் இதே பொருள். அதன் நமது உரையில் விசேஷங்களைக் காண்பது. **अकारिषि - कर्मणि लुङुत्तमैकवचने रूपम्।**

* * *

दयाऽन्येषां दुःखाप्रसहनम् अनन्यो ऽसि सकलैः
दयालुस्त्वं नाथः प्रणमदपराधान् अविदुषः।
क्षमा ते रङ्गेन्दो भवति न तरां नाथ! न तमां
तवौदार्यं यस्मात् तव विभवम् अर्थिस्वम् अमथाः ॥ १०३ ॥

தயாऽந்யேஷாம் து:காப்ரஸஹனம் அநந்யோऽஸி ஸகலை:
தயாலுஸ்த்வம் நாத: ப்ரணமதபராதான் அவிதுஷ: ।
க்ஷமா தே ரங்கேந்தோ! பவதி நதராம் நாத! ந தமாம்
தவௌதார்யம் யஸ்மாத் தவ விபவம் அர்த்திஸ்வம் அமதா: ॥ 103 ॥